
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1076

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

144

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **ஏர்வாடி அ.மீ. அலி சேக் மன்சூர்** அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# ஏர்வாடி அ.மீ. அலி சேக் மன்சூர்

# கொள்கைத் தீப்பிழம்பு



ஓவியம் : ரவி பேலட்

‘கழகத்தின் தொடக்க நாட்களிலேயே தென்மாவட்டங்களில், கழகக் கொள்கைகளைப் பரப்புவதில் மாணவப் பருவம்தொட்டே ஆர்வமுடன் பங்காற்றியவர், சிறந்த பேச்சாளர், கழகத்தின் மூத்த முன்னோடி, எந்த நிலையிலும் தடம் மாறாதவர். நான் கருப்புச்சட்டை அணிந்த காலத்திலேயே என்னை அழைத்து கூட்டம் நடத்தியவர்’ என முத்தமிழறிஞர் கலைஞர் பாராட்டிய உடன்பிறப்பு அலி சேக் மன்சூர்.

அன்றைய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டம் ஏர்வாடியில், 1931–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3–ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் ஜனாப் மீரான் முகைதீன் - ரஹ்மான் பீவி. தொடக்கக் கல்வியை பர்மாவில் தொடங்கியவர், உயர்நிலைப் பள்ளி கல்வியை அம்பாசமுத்திரம் தீர்த்தபதி பள்ளியிலும், பட்டப் படிப்பை நெல்லை இந்து கல்லூரியிலும் படித்தவர். ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் புலமை பெற்றவராகத் திகழ்ந்தவர்.

பள்ளிக் காலத்திலேயே சமூக நீதி கொள்கைகளில் அக்கறை கொண்டு, திராவிடர் கழகச் செயல்பாடுகளில் இணைத்துக் கொண்டவர். கழகத்தின் நெல்லை மாவட்ட முன்னோடியாகத் திகழ்ந்த இரத்தினவேல் பாண்டியன் அவர்களும் அலி சேக்கும் பள்ளிக்காலத் தோழர்கள். அந்த அரசியல் தோழமை, கல்லூரிக் காலத்திலும் தொடர்ந்ததுடன், இருவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து இயங்கத் தொடங்கினர். அதனால், இரத்தினவேல் பாண்டியன் புனித சேவியர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

### நெல்லை மாவட்ட முதல் மாநாடு

1950–ஆம் ஆண்டு தொடக்கத்தில், ஏர்வாடியில் கழகக் கிளையைத் தொடங்கி, கலைஞரை அழைத்து பொதுக்கூட்டம் நடத்தியிருக்கிறார். 1950–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட முதல் மாநாடு கலைஞர் தலைமையில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. அந்த மாநாட்டின் செயலாளராக இருந்து, சிறப்பாக நடத்திக் காட்டியவர் மன்சூர். 20 வயதிலேயே அவரது ஈடுபாடுதான், அண்ணா அவர்களின் அன்பைப் பெற்ற தம்பியாக அவரை இயக்கியது.

1948–ஆம் ஆண்டில், தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் அண்ணா கலந்துகொள்ளவில்லை. பெரியாருடன் முரண்பட்ட நேரத்தில், அந்த நிகழ்வு பரபரப்பாகப் பேசப்பட்டது. மாநாட்டில் அலி சேக் மன்சூர், பெரியாருக்கு அனுப்பிய துண்டுச்சீட்டும், அப்போது பரபரப்பைக் கூட்டியது என்கின்றனர். அவர் அனுப்பிய துண்டுச்சீட்டில், ‘இந்த மாநாட்டுக்கு அண்ணா ஏன் வரவில்லை?’ என்று கேள்வி இருந்தது. மன்சூரை மேடைக்கு அழைத்த பெரியார், ‘எம்.எஸ்.சுப்புலெட்சுமி வரவில்லை என்பதற்காகத் திருமணத்தை நிறுத்திவைப்பீர்களா?’ என அலி சேக் அவர்களிடம் கேட்டுள்ளார். இதுவும் அன்று பரபரப்பாகப் பேசப்பட்டுள்ளது.

### கருத்து விருந்து பட்டியல்

1956–ஆம் ஆண்டு, மே மாதத்தில், கழகத்தின் 2–வது மாநில மாநாடு, தேர்தல் சிறப்பு மாநாடாக நான்கு நாட்கள் நடத்தத் திட்டமிட்டபோது, பேரறிஞர் அண்ணாவிடம் செய்தியாளர்கள் ‘மாநாட்டில் யாரெல்லாம் பேச உள்ளனர்?’ எனக் கேள்வி எழுப்பி உள்ளனர். ‘அண்ணாதுரை முதல் அலிசேக் மன்சூர் வரை பேசவுள்ளனர்’ எனக் கூறி இருக்கிறார். பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டது போலவே, மாநாட்டு அழைப்பிதழில் கருத்து விருந்தளிப்போர் வரிசையில் அண்ணாவின் பெயருக்குக் கீழே அவரின் தம்பிகள் பெயரில் அலி சேக் மன்சூர் பெயரும் இடம்பெற்றுள்ளது.

### கழக மாநாடு போல மணவிழா

ஏர்வாடியில், அலி சேக் மன்சூர் அவர்களின் இல்லத்திற்கு வராத திராவிட இயக்கத் தலைவர்களே இல்லை எனலாம். 1954–ஆம் ஆண்டில் இவரது திருமணம் கழகத் தோழர்கள் முன்னிலையில்தான் நடைபெற்றது. அந்தத் திருமணம், கழகத்தின் மாநாடு போல நடைபெற்றுள்ளது. ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தில், மாவீரன் கே.வி.கே.சாமி, இரத்தினவேல் பாண்டியன், நெல்லை மஸ்தான், கா.மு.கதிரவன், நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் ஆகிய முன்னோடி தலைவர்களோடு ஆழ்ந்த நட்புறவு கொண்டிருந்தவர்.

களப்பணியில் மட்டுமல்ல, சிறந்த மேடைப்பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் திகழ்ந்தவர். ‘கிளர்ச்சி’, ‘நம்நாடு’, ‘தென்றல்’, ‘தனி அரசு’, ‘முரசொலி’ உள்ளிட்ட இதழ்களில் அரசியல் இலக்கியக் கட்டுரைகளை எழுதி இருக்கிறார். ‘திராவிடன்’ இதழ் வெளியிட்ட மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்கிற வரிசையில் இடம்பெற்றுள்ளார்.

1954–ஆம் ஆண்டு, ‘கிளர்ச்சி’ இதழில் அவர் எழுதியுள்ள கட்டுரையொன்றில், ‘பிரெஞ்சு புரட்சியின்போது பாஸ்டில் சிறைச்சாலையில் புரட்சியாளர்கள்மீது கொடூர தாக்குதல்கள் நிறைவேற்றப்பட்டபோதும், இறுதியில் அந்தச் சிறைச்சாலையில் இருந்துதான் எரிமலைக் குழம்பாகப் புரட்சித் தீ பற்றியது. அந்த பாஸ்டில் சிறைச்சாலை போல, இங்கும் சரித்திரம் திரும்ப வேண்டிய சூழ்நிலைகள் நம்மைத் துரத்துகின்றன. சிறைச் சாலைகளா அல்லது நெருப்புக் கோட்டைகளா எனக் கேட்கும் அளவுக்கு நிலைமைகள் முற்றிவிட்டன’ என்று எழுதியிருக்கிறார்.

> “தொண்டர்களாக, சிங்கிள் டீயைக் குடித்துக் கொண்டே பகல் பூரா ஓடியாடி உழைத்தவர்கள் என்ற பாராட்டுக்கு உரித்தானவர்களாகப் பாடுபட்ட நம்முடைய கழகக் கண்மணிகள். அந்த உழைப்பையும் தியாகத்தையும் மறந்து விடலாகாது.”

### சிறை மீண்டவர்களுக்குப் பாராட்டு விழா

விலைவாசி உயர்வு எதிப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்ற அனுபவம் கொண்டவர். 1953 மும்முனைப் போராட்டத்தில் சிறை சென்று திரும்பியவர்களுக்கு ஏர்வாடியில், கழகத்தின் அப்போதைய பொறுப்பாளர் ஏ.கோவிந்தசாமி அவர்களை அழைத்து வந்து பாராட்டு விழா நடத்தி இருக்கிறார்.

அலி சேக் மன்சூர் உணர்ச்சிப் பிழம்பாக உரையாற்றக்கூடியவர். தென்மாவட்டப் பகுதிகள் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பயணம் செய்து கழகக் கொள்கைகளைப் பரப்பியவர். தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டவர். 1962 மற்றும் 1967 ஆம் ஆண்டுகளில் அலி சேக் அவர்களுக்குத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புகள் கனிந்தாலும், அவரை அறிந்த தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு அளிக்கப்பட்டதால், அவர் சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு அமையவில்லை என்பதை 1994–ஆம் ஆண்டில், நெல்லையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டார் முத்தமிழறிஞர் கலைஞர்.

1994 காலகட்டத்தில் நெல்லையில் கழகத்தைக் கட்டுக்கோப்பாக வைக்க, அலி சேக் அவர்கள் மேற்கொண்ட பணியினைக் குறிப்பிட்ட கலைஞர், ‘எந்த நிலையிலும் தடம் மாறாதவர், இடம் மாறாதவர்’ என அன்போடு குறிப்பிட்டார்.

பேராசிரியர், கலைஞர் ஆகியோரோடு நேரடித் தொடர்பும் அன்பும் கொண்டிருந்த அலி சேக் மன்சூர் அவர்கள், அவரின் மகன் மீரான் அவர்களைக் கழக உணர்வோடு வீச்சாக இயங்க வைத்து, அடுத்த தலைமுறையினரைக் கொள்கை ஈடுபாட்டுடன் இயங்க வைத்தார். இளைஞர்களுக்கு கழக அரசியலைக் கடத்துவதில் ஆற்றல் கொண்ட மன்சூர் அவர்கள், 2000 காலகட்டத்துக்குப் பின்னர், வயது மூப்பு காரணமாகப் பணிகளைக் குறைத்துக்கொண்டார். 2013–ஆம் ஆண்டு மார்ச் 3–ஆம் தேதி, உடல்நலக்குறைவு காரணமாக அவர் இயற்கை எய்தியபோது, நெல்லை மாவட்டக் கழகமே திரண்டு வந்து மரியாதை செய்தது.

நெல்லை கழகம் குறித்த வரலாற்றினை கலைஞர் பகிர்ந்துகொண்ட மேடையொன்றில், ‘சிங்கத்தின் பார்வையுடன் நெல்லையில் கழகம் வளர்த்தவர்கள் என கோவில்பட்டி வள்ளிமுத்து, வீரபாகு, கே.வி.கே.சாமி, எம்.எஸ்.சிவசாமி, ஏர்வாடி அலி சேக் மன்சூர், நெல்லை பேட்டை மஸ்தான் எனப் பெயர் களைக் குறிப்பிட்டார். இவர்களெல்லாம் அரும்பு மீசை வைத்த இளைஞர்களாக, தொண்டர்களாக, சிங்கிள் டீயைக் குடித்துக் கொண்டே பகல் பூரா ஓடியாடி உழைத்தவர்கள் என்ற பாராட்டுக்கு உரித்தானவர்களாகப் பாடுபட்ட நம்முடைய கழகக் கண்மணிகள். அந்த உழைப்பையும் தியாகத்தையும் மறந்து விடலாகாது’ என்றார். அலி சேக் மன்சூர் போன்றோரின் அதே வீரியத்துடன் கழகம் இன்றும் செயல்படும் வெற்றிபெறும்.

...துடிக்கும்

## வள்ளலார் மாநாட்டுக்குக் கட்டுரைகள் வரவேற்பு!

சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் பிப்ரவரி முதல் வாரத்தில், அனைத்துலக வள்ளலார் மாநாடு நடைபெறவுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை சார்பில், நடைபெறும் இம்மாநாட்டை முதலமைச்சர் தொடங்கிவைக்க உள்ளார். வள்ளலார் நெறிகள் கண்காட்சி, மூலிகைக் கண்காட்சி மற்றும் சித்த மருத்துவ முகாம், கருத்தரங்கங்கள், சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள், நாள் முழுவதும் அன்னதானம், சன்மார்க்க அன்பர்கள் பேரணி ஆகியவை மாநாட்டில் இடம்பெறுகின்றன.

இந்த மாநாட்டையொட்டி நடைபெறும் ஆய்வரங்கத்துக்கு ‘வள்ளலார் கண்ட ஆன்மநேய ஒருமைப்பாடு’, ‘வள்ளலாரின் ஜீவகாருண்யம்’, ‘வள்ளலாரின் அண்டவெளித் தத்துவம்’, ‘சங்கம் – சபை – சாலை’ உள்ளிட்ட 27 தலைப்புகளில் கட்டுரைகள் வரவேற்கப்பட்டுள்ளன. பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், கட்டுரையாளர்கள் வரும் 20–ஆம் தேதிக்குள் கட்டுரைகளை அனுப்பி வைக்கலாம்.

கட்டுரைகள் தமிழிலோ ஆங்கிலத்திலோ இருக்கலாம். ஏ–4 தாளில் 3 பக்கங்களுக்கு மிகாமல், எழுத்தளவு 12 கொண்டதாகக் கட்டுரைகள் இருக்க வேண்டும். தமிழில் யுனிகோடு எழுத்துருவிலும், ஆங்கிலத்தில் Times New Roman எழுத்துருவிலும் இருக்க வேண்டும். கட்டுரையாளரின் பெயர், முகவரி, மின்னஞ்சல் மற்றும் அலைபேசி எண் இடம்பெற வேண்டும். தேர்வு செய்யப்படும் கட்டுரைகள் மலரில் வெளியிடப்படுவதுடன், ஆய்வரங்கத்தில் வாசிக்கவும் அனுமதி வழங்கப்படும் என இந்து சமய அறநிலையத்துறை தெரிவித்துள்ளது.

vallalarintlconf2026@gmail.com, vallalarworldconference2026@gmail.com ஆகிய மின்னஞ்சல் முகவரிகளுக்கு விருப்பம் உள்ளவர்கள் கட்டுரைகளை அனுப்பலாம்.

## ஃப்ளாஷ்பேக்





முரளி.முக்கேஷ்

### கொள்கைமிக்க மாணவர்கள் வர வேண்டும்!

2016–ஆம் ஆண்டு, நான் மாணவர் அணியில் செயல்பட்டபோது, எங்கள் கல்லூரியின் மாணவர் பேரவை சார்பாக, அன்றைய பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை சந்தித்தேன். ‘கொள்கை உணர்வுமிக்க மாணவர்களை இயக்கத்துக்குக் கொண்டு வர வேண்டும். அதற்கு உங்களைப் போன்றவர்கள் தேவை’ என்று தலைவர் வாழ்த்தியது மறக்க முடியாத நினைவு.

**– முரளி.முக்கேஷ்,**
**ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்,**
**மகேந்திரவாடி, நெமிலி தெற்கு, ராணிப்பேட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### வேறு யாரால் முடியும்?

1956-ஆம் ஆண்டு, திருச்சியில் நடைபெற்ற, தேர்தல் சிறப்பு மாநாட்டில் பேரறிஞர் அண்ணாவின் உரை பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. “தேர்தலில் ஈடுபட நம்மாலே முடியுமா? என்று சில தோழர்கள் கேட்கிறார்கள், ‘உன்னால் முடியாவிட்டால் வேறு யாரால் முடியும்? நீ இதைக்கூடச் செய்யாவிட்டால், வேறு எதைத்தான் செய்யப் போகிறாய்? இதிலே கூட நம்முடைய பலத்தைக்காட்ட முடியவில்லை என்றால், வேறு எதிலே நாம் காட்ட முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்” என்றார் அண்ணா.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.